TNMD150002482012

# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

2026ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 28ம்நாள் வெள்ளிக்கிழமை

## முதலேற்பு வழக்கு எண் 49/2012

வி. மலையாண்டி என்ற ராசு .... வாதி.

/எதிர்/

1) தமிழ்நாடு அரசுக்காக அதன்
மாவட்ட ஆட்சியாளர், மதுரை மூலமாக,
2) வட்டார வளர்ச்சி அலுவலர்,
மேலூர்.
3) சுதாகோட்டைவீரன்,
தலைவர், கல்லம்பட்டி பஞ்சாயத்து
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.
4) ஏ. ஓ. கே. கருப்பணன்.
*5) வருவாய் கோட்டாட்சியர், மதுரை.
*6) வட்டாட்சியர், மேலூர்.
*7) M. V. வீரணன்**(இறப்பு).
**8) மந்தைவீரன் (எ) போஸ்
**9) V. தங்கராஜ்.
**10) V. கோட்டை வீரன்.
**11) V. முனுசாமி.

... பிரதிவாதிகள்

(*) Amended as per order in I.A. No.553/2017 dated 13.07.2017.

(**) Amended as per order in I.A. No.5/2023 dated 07.08.2013.

## எதிரிடை கோருரிமை மனு

*1) M. V. வீரணன்**(இறப்பு).

*2) மந்தைவீரன் (எ) போஸ்.

*3) V. தங்கராஜ்.

*4) கோட்டை வீரன்.

*5) முனுசாமி.

... எதிர்கோருரிமையாளர்கள்/7 முதல் 11ம் பிரதிவாதிகள்

/எதிர்/

வி. மலையாண்டி என்ற ராசு ... எதிர்மனுதாரர்/வாதி

(*) Amended as per order in I.A. No.8/2024 dated 23.01.2025.

இவ்வழக்கு 17.08.2026 தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.இராமசாமி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், 4ம் பிரதிவாதி தரப்பில் திரு.A.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 7ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 8 முதல் 11ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.சுதர்சன் பிரபு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

**வாதி தரப்பில் கோரப்பட்ட பரிகாரம் –** இந்த வழக்கானது வாதியின் அனுபவத்தில் உள்ள தாவா வழக்கிடைச் சொத்தில், பிரதிவாதிகளாலோ அல்லது அவர்களது வகையாட்களாலோ அல்லது அவர்களது வகை முகவர்களாலோ வாதியின் அனுபவத்திற்கு எவ்வித இடையூறோ, இன்னல்களோ ஏற்படுத்தாமல் இருக்கத்தக்கதாய் பிரதிவாதிகள் பேரில் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7 முதல் 11ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமை பரிகாரம் –** வழக்கிடை கல்லம்பட்டி கிராம புல எண்.318/28ல் வழக்கிடை சந்தில் வாதி எழுப்பியுள்ள காம்பவுண்ட் சுவற்றினையும் / ஆக்கிரமிப்புகளையும், எதிர்கோருரிமை சொத்தான கல்லம்பட்டி கிராம புல எண்.318/22க்குட்பட்ட பொதுப்பாதையில் வாதி ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்புகளை / கட்டிடங்களை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அகற்றிட வேண்டி செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :</u>–

2.1) தாவா சொத்தானது வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது ஆகும். தாவா சொத்தானது சர்வே எண் 318/ 24ல் உள்ள வீடும், மேற்படி வீட்டில் முன்புறம் அதாவது தென்புறம் அமைந்துள்ள காம்பவுண்ட் சுவர் இருக்கும் இடமான சர்வே எண் 318/ 28ம் ஆகும். மேற்படி காம்பவுண்ட் சுவர் எழுப்பி சுமார் 35 வருடங்களுக்கு மேலாக இருக்கும். மேற்படி வீடும், அதனை சுற்றியுள்ள காலியிடம் மற்றும் காம்பவுண்ட் சுவர் வாதியின் அனுபவத்தில் சுமார் 35 வருடங்களாக எந்தவித இடையூறும் இல்லாமல் உள்ளது.

2.2) வாதிக்கும், 3,4 பிரதிவாதிகளுக்கும் சமீபத்தில் நடைபெற்ற தேர்தல் முன்விரோதம் காரணமாக 3ம் பிரதிவாதி தற்போது கல்லம்பட்டி கிராம பஞ்சாயத்து தலைவராக உள்ளதால், 4ம் பிரதிவாதி தூண்டுதலின் பேரில் 3ம் பிரதிவாதி வாதியின் வீட்டு காம்பவுண்ட் சுவர் 318/ 28ல் இருப்பதை, அதுவும் வாதி கடந்த 35 வருடங்களாக அனுபவித்து வருவதை ஆக்கிரமிப்பு எனக் கூறி, 2ம் பிரதிவாதி மூலமாக கடந்த 24.1.2012ம் தேதி வாதிக்கு 27.1.2012க்குள் வாதியின் அனுபவத்தில் 35 வருடங்களுக்கு மேலாக உள்ள காம்பவுண்ட் சுவற்றை எடுத்து விட சொல்லி அறிவிப்பு ஒன்றினை அனுப்பி உள்ளார். வாதியும், 2ம் பிரதிவாதியிடம் நேரில் சென்று விளக்கம் அளித்தார். எனினும், வாதியின் பேச்சை

செவிசாய்க்காது 2ம் பிரதிவாதியானவர், 3, 4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு, மீண்டும் 27.1.2012ல் ஒரு அறிவிப்பு கொடுத்து 30.1.2012க்குள் எடுத்துக் கொள்ளச் சொல்லியும், தவறினால் தான் அகற்றிவிடப் போவதாகவும் ந.க.எண் 2371/தி1/2012 இல் அனுப்பி உள்ளார். மீண்டும் வாதி 2ம் பிரதிவாதியிடம் பேசும்போது அவரும் 3, 4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு மீண்டும் 30.1.2012 தேதியில் வீட்டு கதவில் அறிவிப்பு ஒன்றினை ஒட்டியும், தாவா சொத்தினை அதுவும் வாதியின் அனுபவத்தில் உள்ள காம்பவுண்ட் சுவற்றினை அகற்றி விட வேண்டும் என்றும், தவறினால் 2ம் பிரதிவாதி அகற்றி விடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

2.3) மேலும், 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள காம்பவுண்டு சுவர் உள்ள இடம் சர்வே எண் 318/3 என அவசரக் கதியில் 3, 4 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். வருவாய்த் துறையில் மேற்படி கிராமத்தில் சர்வே எண் 318/3ல் உள்ள இடம் வருவாய் கணக்கில் தங்கராஜ் என்பவர் பெயரில் மனை இடம் என உள்ளது. மேலும் கிராமக்கணக்கில் புல எண் 318/24 வாதி பெயரிலும், 318/28 சந்து எனவும் உள்ளது. புலவரைபடத்தில் மேற்படி 318/28 சந்து என்ற இடத்தில் வடக்கு பகுதியில் வாதி 318/24லும் 318/23 மந்தைவீரன் கோட்டை வீரன், சின்னணன் என்றும், 318/21ல் சின்னணன் என்றும், 318/25 இல் கோட்டைவீரன் என்றும், 318/26 சின்னணன் என்றும், 318/27 மந்தை வீரன் என்றும் உள்ளது. மேற்படி புல எண் 318 /28க்கு தெற்கே 318/13 ஏ.ஓ.கே கருப்பணன் அதாவது 4ம் பிரதிவாதியின் பெயரிலும் 318/14 கருப்பாயி என்றும், 318/29 ல் சின்னணன் என்பவர் பெயரிலும் உள்ளது. மேற்படிச் சந்தில் மேற்படியார்களை தவிர இருபுறமும் வேறு யாருக்கும் எவ்வித பாத்திய உரிமையும் கிடையாது.

2.4) வாதியின் வீடும், காம்பவுண்டு சுவரும் உள்ள இடம் கடந்த 35

வருடங்களுக்கு மேலாக எவ்வித இடையூறும் இன்றி வாதியின் அமைதியான அனுபவத்தில் இருந்து வருகின்றது. தேர்தல் முன்விரோதத்தினை வைத்து 3, 4 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில், 2ம் பிரதிவாதி சட்ட விரோதமாக செயல்பட்டு வருகின்றார். பிரதிவாதியின் சட்டவிரோதமான செயல்பாட்டினை தடுக்கும் பொருட்டு வாதி தாவா வழக்கினை பிரதிவாதிகள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

<u>3. 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1, 3ம் பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>

3.1) தாவா செத்தானது கிராம கணக்குகளின் படி சர்வே எண் 318/ 24 என்பது மலையாண்டி என்றும், 318/28 என்பது அரசு புறம்போக்கு சந்து என்றும் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் பஞ்சாயத்து தேர்தல் முன்விரோதம் இருந்தது என்பதை வாதியே நிரூபிக்க வேண்டும். சர்வே எண் 318/28ல் காம்பவுண்ட் சுவர் கட்டி 30 வருடங்களாக வாதி அனுபவம் செய்து வருவதை வாதியே நிரூபிக்க வேண்டும். 2ம் பிரதிவாதியால் 24.1.2012ல் வாதிக்கு 27.1.2012க்குள் 35 வருடங்களாக அனுபவத்தில் உள்ள காம்பவுண்ட் சுவற்றை அகற்றிக் கொள்ளுமாறு அறிவிப்பு கொடுத்ததாக சொல்வதை இந்த பிரதிவாதி மறுக்கிறார்.

3.2) வாதி 35 ஆண்டுகளாக அனுபவித்து வருவதாக சொல்லப்படும் சந்து அரசு புறம்போக்கு ஆகும். இதில் வாதிக்கு எந்த ஒரு ஆதாரமும் இருப்பதாக தெரியவில்லை. அரசு அலுவலர்களை அலைக்கழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்டது. அதன் பூரண உரிமையாளர் அரசாங்கம். அதில் வாதியோ மற்றும் வேற எவருக்குமோ உரிமையோ அனுபவமோ பாத்தியமோ கிடையாது. உரிமை

கொண்டாடவும் முடியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு எந்தவித முன்னறிவிப்பும் அனுப்பாமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. வாதிக்கு எவ்வித நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரமும் விளம்புகை பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல.

4. <u>4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>

4.1) வாதி சர்வே எண் 318/24 குடியிருந்து வருகிறார் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால் சர்வே எண் 318/28 இடமானது வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு மேற்படி இடத்தில் 35 ஆண்டுகளாக அனுபவம் செய்து காம்பவுண்ட் சுவர் கட்டி அனுபவித்து வருகிறார் என்பது மறுக்கப்படுகிறது.

4.2) சர்வே எண் 318/ 28 இல் தென்வடலாக செல்லக்கூடிய சந்து உள்ளது. 4ம் பிரதிவாதி சர்வே எண் 318/13 இல் குடியிருந்து வருகிறார். வாதியும், 4ம் பிரதிவாதியும் மற்ற அருகில் உள்ள நபர்களும், மேற்படி சந்தில் கழிவு நீர் மற்றும் மழைக்காலங்களில் தண்ணீர் வெளியேற்றவும் பயன்படுத்தி வருகின்றனர். இந்த சூழ்நிலையில், மேற்படி சந்தில் இடையூறு ஏற்படுத்தும் விதமாக வாதி கட்டுமானத்தை ஆரம்பித்தார். எனவே, 4ம் பிரதிவாதி ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால், வாதியின் செயல்பாட்டில் மாற்றம் தெரியவில்லை. வாதி சந்தில் குறுக்கே 3 அடி உயரத்திற்கு ஹாலோபிளாக் மூலம் தடுப்புச் சுவர் கட்டி சந்தின் அனுபவத்திற்கு இடையூறு செய்து வருகிறார். பொது சந்தில் ஏற்படுத்தி உள்ள தடுப்பை தவிர வாதி வீட்டிற்கு வேறு எந்த காம்பவுண்ட் சுவரும் இல்லை. எனவே 35 வருடங்களாக தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்ற வாதி தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல. மேற்படி சந்தில் வாதியால் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு சம்பந்தமாக 4ம் பிரதிவாதி தரப்பில் வருவாய் துறையினரிடம் புகார் கொடுக்கப்பட்டும், மேலூர் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையரிடம் புகார் கொடுக்கப்பட்டும், வருவாய்த்துறை

ஆவணங்களை பார்வையிட்டு வாதி செய்துள்ள ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பை பெற்றுக் கொண்ட பின்பும் வாதி ஆக்கிரமிப்பை அகற்றாமல் இருந்து வருகிறார். எனவே, 3ம் பிரதிவாதி 8.1.2008ம் தேதி மீண்டும் ஆக்கிரமிப்பை அகற்ற கேட்டு வாதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன் பின்னரும் வாதி ஆக்கிரமிப்பு அகற்றாமல் இருந்து வந்தார். பொய்யான வழக்கு மூலத்தை உற்பத்தி செய்து இந்த வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

5. 7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமையின் சுருக்கம் :–

5.1) 7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை 8 முதல் 11ம் பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தாவா பிரதான சொத்து வாதிக்கு பாத்தியப்படாததும், அரசுக்கு பாத்தியப்பட்டதுமான சர்வே எண் 318/28ல் பொதுச்சந்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்துள்ள காம்பவுண்ட் சுவரை அகற்றி விடக்கூடாது என அரசு அதிகாரிகளுக்கு எதிராக சட்ட விரோதமான பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வே நம்பர் 318/24 உள்ள வீடு வாதிக்கு பார்த்தியப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதே நேரத்தில் சர்வே எண் 318/28ல் வாதிக்கு யாதொரு தனித்த பாத்தியமும் கிடையாது. உண்மையில், கல்லம்பட்டி கிராம சர்வே எண் 318/ 28க்கு உட்பட்ட இடமானது கிராம வருவாய் கணக்குகளில் சந்து என்று குறிப்பிடப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சந்து என உட்பிரிவு உள்ள பொதுச் சந்து கல்லம்பட்டி கிராமத்தார் மட்டுமின்றி பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தக்கூடிய பொது சந்து ஆகும். அது ஒரு பொது போக்குவரத்து சந்தாகவே கருதப்பட்டு நினைவுக்கு எட்டா காலத்தில் இருந்து பொது புழக்கத்தில் இருந்து வருகின்றது. அத்தகு

பொதுச்சந்தை குறிப்பிட்ட நபர்கள் தான் பயன்படுத்த வேண்டும் என்ற சட்ட வரையறை ஏதுமில்லை. ஆனால் புழக்கஉரிமை பிறரது பரிபூரண புழக்க உரிமைக்கு தடையையோ, நிரந்தர புழக்க இடையூறோ ஏற்படுத்தும் வண்ணம் இருத்தல் கூடாது என்பது பொது புழக்க கோட்பாடும், நியதியும் ஆகும். அத்தகுப் பொதுப் புழக்க சந்தான சர்வே எண் 318/28ல் வாதி சட்டத்திற்கு புறம்பாக காம்பவுண்ட் சுவர் எழுப்பி விட்டு அதனை அப்புறப்படுத்துவதில் இருந்து தடுக்க எத்தனித்து, அரசுக்கு எதிராக வழக்கு தொடுப்பது அபத்தமானதும், சட்டத்தை கேலிக்கூத்தாகும் செயலாகும்.

5.2) தாவா வழக்கு சொத்தை குறித்து தேர்தல் முன்விரோதம் காரணமாக வாதிக்கும், 3, 4 பிரதிவாதிகளுக்கும் இடையே தாவா இருந்து வந்ததாக வழக்குரை சங்கதியில் வாதி கூறியுள்ள சங்கதிகளை வாதியே கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர். வாதி தம்முடைய சட்டப்படியான பாத்தியத்திற்கு அப்பாற்பட்ட சர்வே எண் 318/28ல் சுவாதீனம் கொண்டாடுவதையும், ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் எழுப்புவதையும் கண்டித்து தடுக்க வேண்டிய சட்டப்படியான கடமையில் உள்ள 1 முதல் 3 மற்றும் 5, 6 பிரதிவாதிகளை அரசு பணி செய்ய விடாமல் தடை ஏற்படுத்தும் நோக்கிலேயே தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளார். தேர்தல் முன்விரோதம் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளார்.

5.3) வழக்குரை சங்கதிகளில் வாதியே சர்வே எண் 318/28 சொத்து கிராம கணக்குகளில் சந்து என்று ஒப்புக்கொண்டு உள்ளார். எனவே சர்வே எண் 318/28 பொதுச்சந்தில் வாதியே ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் கட்டி உள்ளதையும், வழக்குரை சங்கதிகள் விளக்கம் அளிக்கின்றன. ஆகவே சர்வே நம்பர் 318/ 28ல் வாதி எழுப்பியுள்ள ஆக்கிரமிப்பு காம்பவுண்ட் சுவர் சட்டப்படி அகற்றப்பட வேண்டியதாகும்.

5.4) உண்மையில் எதிர்கோருரிமை சொத்தான புல எண் 318/22 மற்றும் புல எண் 318/28 சொத்துக்கள் கல்லம்பட்டி கிராம ஒய்யம்மாள் கோவில் வீடு மற்றும் ஒய்யக்கார் கோவில் வீட்டிற்கு செல்லும் பாதையாகவும், சந்தாகவும், கல்லம்பட்டி கிராம வருவாய் கணக்குகளில் தாக்கல் ஆகி உள்ளது. ஆக வாதி இத்தகு விபரங்களை மறைத்து தாக்கல் செய்துள்ள வழக்கு உண்மை விபரங்களை மறைத்து தாக்கல் செய்துள்ள தோஷத்திற்கு உள்ளாகிறது. மேற்படி சங்கதிகள் இந்த பிரதிவாதிகள் எதிர்கோருரிமையை எழுப்பும் அளவிற்கு காரணிகளை உற்பத்தி செய்துள்ளது. வாதி கல்லம்பட்டி கிராம சர்வே எண் 318/28 மட்டுமல்லாது சர்வே எண் 318/22லும் பொது பாதையை ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் எழுப்பி உள்ளார். அத்தகைய நடவடிக்கை சட்டபுறம்பானது. சர்வே நம்பர் 318/22 பாதையினை வாதி ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் எழுப்பி உள்ள தாவா ஏற்கனவே மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் விசாரணையில் இருந்து வந்த நிலையில் தற்போது வரை வாதி சர்வே எண் 318/22 பொதுபாதையில் தான் ஆக்கிரமித்து கட்டியுள்ள காம்பவுண்ட் சுவற்றினை அகற்ற மறுத்து வருகிறார். எனவே சர்வே எண் 318/28 சந்தில் மட்டுமல்லாது, சர்வே எண் 318 /22 பாதையிலும் வாதி சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார். சர்வே எண் 318/28 சொத்து தாவா சொத்திற்கு கிழக்கிலும், சர்வே எண் 318/22 பாதை தாவா சொத்திற்கு மேற்கிலும் உள்ளது. எனவே இரு சொத்துக்களும் தாய்புலமான 318 ஸ்தலத்தில் அமைந்துள்ளன. மேற்படி சர்வே எண் 318/22 பாதையில் வாதி ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்புகளால் இந்த 7ம் பிரதிவாதி வகையறா பங்காளிக்கு பாத்தியப்பட்ட கோவில் வீட்டிற்கு செல்லும் பாதை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த பிரதிவாதி சர்வே நம்பர் 318/22 பாதை ஆக்கிரமிப்பு குறித்து எதிர்கோருரிமை எழுப்ப வேண்டி இருக்கிறது.

<u>6. 7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்கோருரிமைக்கு வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் சுருக்கம்:–</u>

6.1) 7ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை 7ம் பிரதிவாதியே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டும். தாவா சொத்தில் 7ம் பிரதிவாதிக்கு பாத்தியம் உள்ளது போல் வாதிக்கு பாத்தியம் இல்லை என 7ம் பிரதிவாதி கூறும் கூற்று தாவா சொத்தில் எதிர்கோருரிமை மூலம் சாத்தியமும் உரிமையும் கொண்டாட முயல்வதாக தெரியவருகின்றது. சர்வே எண் 318/28 கிராம கணக்கில் சந்து என்ற நிலையில் மேற்படி சந்து 7ம் பிரதிவாதி கூறுவதுபோல் கல்லம்பட்டி கிராமத்தார் மற்றும் பொதுமக்கள் பொதுச்சந்தாக பயன்படுத்தக்கூடிய சந்து என்று கூறுவது வாதியால் முற்றிலும் மறுக்கப்படுகிறது.

6.2) பொதுச்சந்து என கூறி 7ம் பிரதிவாதி வழக்கின் தன்மையினை திசை திருப்ப முயற்சிக்கின்றார். 7ம் பிரதிவாதி கூறுவதுபோல் தாவா சொத்து போக்குவரத்து சந்தாக எந்த நாளும் பயன்படுத்தப்படவில்லை. வாதி வழக்குச் சொத்தினை பொதுச்சந்தாகவோ அல்லது சந்தாகவோ சொத்து விபரத்தில் சொல்லவில்லை. மேலும், நான்குமாலுக்குரிய இடத்தில் 7ம் பிரதிவாதி குறிப்பிடும் சந்து எதுவும் கிடையாது. 7ம் பிரதிவாதி கூறும் புழக்க உரிமை என்பது எள்ளளவும் கிடையாது. வாதி காம்பவுண்ட் சுவர் எழுப்பி வழக்குரையில் கூறியுள்ளதுபோல் 35 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வருகின்றார். 7ம் பிரதிவாதி கூறுவது போல் வாதி சட்டப் புறம்பாக எந்நாளும் காம்பவுண்ட் சுவர் எழுப்பவில்லை. 35 வருடங்களுக்கு மேலாக தாவா சொத்தினை அனுபவித்து வருவதில் சட்டப் புறம்பாக வாதி, 7ம் பிரதிவாதி கூறுவது போல் செயல்படவில்லை. அரசுக்காக 7ம் பிரதிவாதி எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதி தான் சட்டத்தினை 7ம் பிரதிவாதி கேலி செய்வது போல் உள்ளது. வாதி இந்த வழக்கை ஏதோ தேர்தல் சாயம் பூசியதாகவும் சம்பவங்களை உற்பத்தி செய்ததாகவும் சொல்லியுள்ளது 7ம்

பிரதிவாதி வாதி கூடவே இருந்து செயல்பட்டதாகவும், அதுபோல் சித்தரித்து கட்டுக்கதை இட்டுக்கட்டி எதிர்கோருரிமை கோருவதால், 7ம் பிரதிவாதி வாதிக்கு பல வழிகளில் இன்னல்களும், இடையூருகளும் நேரடியாகவும், மறைமுகமாகவும் செய்து வருபவர். அதனால் தான் எதிர்வழக்குரையில் வழக்கில் தேவையில்லாத மற்றும் வாதிக்கு அவசியமில்லாத வார்த்தைகளை பிரயோகித்து வீண் தர்க்கம் செய்து வருகின்றார். 7ம் பிரதிவாதி வாதியின் காம்பவுண்ட் சுவற்றை அகற்ற, இடிக்க கோருவது 7ம் பிரதிவாதியின் உள்நோக்கத்தினையும், தீய எண்ணத்தினையும் காட்டுகின்றது. சட்ட வரையறை காலத்திற்கு மேலாக வாதி அனுபவித்து வரும் தாவா சொத்தினை 7ம் பிரதிவாதி உரிமை கோருவது சட்டப்படி ஏற்புடையது அல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நான்குமால் சரியானவை ஆகும். தாவா சொத்தில் 7ம் பிரதிவாதி கூறும் ஒய்யம்மாள் கோவில் வீடு மற்றும் ஒய்யக்கான் கோவில் வீட்டிற்கு செல்லும் பாதை தாவா சொத்து என்று 7ம் பிரதிவாதி கூறுவதை வாதி மறுக்கின்றார். கோவில் பாதை தாவா சொத்திற்கு மேற்கே உள்ளது. 7ம் பிரதிவாதி கூறுவது போல் எதிர் கோருரிமை கூறும் அளவிற்கு வாதி வழக்கு உள்ளதாக தெரிவித்திருப்பதில் வாதி காம்பவுண்ட் சுவர் எழுப்பிய காலமான 35 வருடங்களுக்கு முன்பே அவர் உரிமை கோரிக்கை செய்திருக்க வேண்டும். வாதி எந்த நாளும் உண்மை சங்கதிகளை மறைக்கவில்லை. 7ம் பிரதிவாதி எதிர்கோருரிமையினை பொய்யான சங்கதியுடன் தாக்கல் செய்துள்ளார். வாதி சட்டப் புறம்பாக ஆக்கிரமிப்பு செய்யவில்லை. சட்ட வரையறை காலத்திற்கு மேலாக தாவா சொத்தினை அனுபவித்து வருவதால் வாதிக்கு எதிராக 7ம் பிரதிவாதி உரிமை கோர அருகதை அற்றவர். எதிர் கோருரிமை கோர 7ம் பிரதிவாதிக்கு உரிமையும் அருகதையும் கிடையாது. 7ம் பிரதிவாதி எதிர்கோருரிமையில் கோரியுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கதக்கதல்ல.

07.<u>சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u>

இவ்வழக்கில் வாதியின் வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கின் வாதி திரு. மலையாண்டி (எ) ராசு என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் திரு. மந்தைவீரன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.9 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியான திரு. சுந்தரசாமி (வட்டார வளர்ச்சி அலுவலர்) என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியான திரு.A.O.K. கருப்பணன் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>08. எழுவினாக்கள்</u>

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை, 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல செய்யப்பட்ட எதிர்வழக்குரை, 7 முதல் 11ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோரிக்கை அடிப்படையில் பின்வருமாறு எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1) Whether the suit property is in the possession of the plaintiff as stated in the plaint?

2) Whether the plaintiff is entitled to the relief of Permanent Injunction as prayed for?

3) Whether the 7$^{th}$ defendant is entitled to the relief of Mandatory Injunction as prayed in the counter claim?

4) To what other reliefs the parties to the suit are entitled?

9.1) வாதி தரப்பு கற்றிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், கல்லம்பட்டி கிராமம் சர்வே நம்பர் 318/24–ல் வாதிக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றும், வீட்டின் தென்புறம் உள்ள சர்வே எண்.318/28–ல் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றும், மேற்படி காம்பவுண்ட் சுவர்தான் இந்த வழக்கின் வழக்கு சொத்து என்றும், மேற்படி காம்பவுண்ட் சுவரானது வழக்கு தாக்கல் செய்வதற்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், தேர்தல் முன் பகை காரணமாக 3,4 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் 2ம் பிரதிவாதி தாவா காம்பவுண்ட் சுவரை அகற்ற 24.01.2015ம் தேதி அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும், மேற்படி அறிவிப்பின் சர்வே எண். 318/3 என அவசரகதியில் தவறாக குறிப்பிட்டு அனுப்பியுள்ளார் என்றும், அதன்பின்பு மீண்டும் 2ம் பிரதிவாதி தாவா காம்பவுண்ட் சுவரை அகற்ற 27.01.2012ம் தேதி அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும், 2ம் பிரதிவாதி 3,4 பிரதிவாதிகளின் பேரில் வாதியின் அனுபவத்தில் உள்ள காம்பவுண்ட் சுவரை அகற்ற முயற்சி செயது வருகிறார் என்றும், தாவா சொத்து 35 ஆண்டுகளுக்கு மேலாக வாதியின் அமைதியான அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் எனவே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கு அனுமதிக்கப்படவேண்டுமென்றும் வாதிட்டார். மேலும் எதிர்கோருரிமை மனு சம்மந்தமாக பிரதிவாதிகள் தரப்பு எந்த ஒரு சாட்சியமும் அளிக்கப்படாத நிலையில் எதிர்கோருரிமை நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதிட்டார்.

9.2) 1, 2, 3, 5, 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, வருவாய் துறை ஆவணம்படி தாவா சொத்தான சர்வே எண்.318/28 ஆனது அரசு புறம்போக்கு சந்து என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி தரப்பு வழக்குப்படியே

தாவா சொத்து சர்கார் புறம்போக்கு சந்து என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்றும், அரசுக்கு பாத்தியப்பட்ட பொது மக்கள் பயன்பாட்டிற்குரிய சந்தைப் பொறுத்து வாதி ஆக்கரமிப்பு செய்ததால் ஆக்கரமிப்பை அகற்ற கேட்டு 2ம் பிரதிவாதியால் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும், தாவா சொத்தை பொறுத்து அரசு முழு உரிமையாளர் என்பதால், வாதிகள் செய்துள்ள ஆக்கரமிப்பை அகற்ற சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் வாதிட்டார்.

9.3) 8 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, சர்வே எண்.318/28–ல் கிராம கணக்குப்படி சந்து என வகையப்படுத்தப்பட்டுள்ளது என்றும், கல்லம்பட்டி கிராமத்தார் மட்டுமின்றி பொது மக்கள் அனைவரும் பொது போக்குவரத்தாக மேற்படி சந்தை பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், மேற்படி சந்தில் பொது மக்களின் புழக்க உரிமைக்கு யாரும் இடையூறு ஏற்படுத்த முடியாது என்றும், பொதுமக்கள் பயன்படுத்தும் சந்தை ஆக்கரமிப்பு செய்துவிட்டு அரசுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் சர்வே எண்.318/22 மற்றும் சர்வே எண்.318/28 ஆகியவை கல்லம்பட்டி கிராம ஒய்யம்மாள் கோவில் வீடு மற்றும் ஒய்யக்காள் கோவில் வீட்டிற்கு செல்லும் பாதையாகவும், சந்தாகவும் கிராம கணக்குகளில் தாக்கலாகியுள்ளது என்றும், எனவே பிரதிவாதிகள் தரப்பில் எதிர்கோருரிமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், சர்வே எண்.318/22 மற்றும் சர்வே எண்.318/28 ஆகியவற்றில் வாதி ஆக்கரமித்து கட்டியுள்ள காம்பவுண்ட் சுவரில் இடித்து அப்புறப்படுத்த வேண்டுமென்ற எதிர்கோருரிமையில் கோரப்பட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றும், வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் வாதிட்டார்.

9.4) வாதி தரப்பில், வாதி திரு. மலையாண்டி (எ) ராசு என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில் வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். கோட்டை வீரன் என்பவர் பெயரிலான நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா வா.சா.ஆ.1 ஆகவும், மலையாண்டி என்பவர் பெயரிலான நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா வா.சா.ஆ.2 ஆகவும், புல எண்கள்.317, 318, 319க்கான புல வரைபடங்கள் உண்மை நகல் வா.சா.ஆ.3 ஆகவும், நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 24.01.2012ம் தேதியிட்ட வட்டார வளர்ச்சி அலுவலரின் கடிதம் புகைப்பட நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 27.01.2012ம் தேதியிட்ட வட்டார வளர்ச்சி அலுவலரின் கடிதம் புகைப்பட நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 19.02.2005ம் தேதியிட்ட வீட்டு வரி இரசீது அசல் வா.சா.ஆ.7 ஆகவும், கேவியட் மனுவின் நகல் வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில், சாட்சியாக திரு. சி. மந்தைவீரன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் வா.சா.2ன் ஆதார் அடையாள அட்டை வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9.5) பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக திரு. சுந்தரசாமி (வட்டார வளர்ச்சி அலுவலர்) என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் சர்வே எண்.318/24–ற்குரிய நத்தம் தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் பி.வா.சா.ஆ.1 ஆகவும், சர்வே எண்.318/28–ற்குரிய நத்தம் தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் பி.வா.சா.ஆ.2 ஆகவும், சர்வே எண்.318ற்குரிய புல வரைபடம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக திரு.A.O.K. கருப்பணன் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

10. எழுவினா 1 மற்றும் 2ற்கான தீர்வு :

1) Whether the suit property is in the possession of the plaintiff as stated in the plaint?

2) Whether the plaintiff is entitled to the relief of Permanent Injunction as prayed for?

10.1) வாதி தரப்பில் வாதிடும்போது, தாவா சொத்தானது வாதியின் வீட்டிற்கு தென்புறம் உள்ள சர்வே எண்.318/28ல் கட்டப்பட்டுள்ள காம்பவுண்ட் சுவர் என்பதும், சர்வே எண்.318/28 என்பது சர்கார் புறம்போக்கு சந்து என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி சர்வே எண்.318/28ல் வாதிகளின் குடும்பத்தினர் 35 ஆண்டுகளுக்கு முன்பே காம்பவுண்ட் சுவர் கட்டி எந்த ஒரு இடையூறுமின்றி அனுபவம் செய்து வருகின்றனர் என்று வாதிடப்படுகிறது.

10.2) இது சம்மந்தமாக ஆவணங்களில் பரிசீலனை செய்து பார்க்கையில், வா.சா.ஆ.1 ஆவணமானது சர்வே எண். 318/25-க்கு வீரணன் மகன் கோட்டைவீரன் பெயரில் வழங்கப்பட்டுள்ள நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.2 ஆவணமானது சர்வே எண். 318/24-க்கு வீரணன் மகன் மலையாண்டி பெயரில் வழங்கப்பட்டுள்ள நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.3 ஆவணமானது சர்வே எண்கள் 317, 318-க்கான புல வரைபடங்கள் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.4 ஆவணமானது நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடு என்பது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ஆவணங்களானது நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா என்பது தெரிய வருகிறது. பி.வா.சா.ஆ.3 ஆவணமானது சர்வே எண்.318க்கான புல வரைபடம் என்பது தெரியவருகிறது.

10.3) மேலே கண்ட ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து

பார்க்கும்போது, சர்வே எண்.318/28 சம்மந்தமாக வாதி பெயரில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டாவை பரிசீலனை செய்து பார்க்கும்போது, சர்வே எண்.318/28 ஆனாது சர்க்கார் புறம்போக்கு சந்து என வகைப்படுத்தப்பட்டுள்ளது தெரியவருகின்றது. வாதிகள் தரப்பிலும் சர்வே எண்.318/28–ஆனாது சர்க்கார் புறம்போக்கு சந்து என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் வாதிகள் தரப்பில் சர்வே எண்.318/28 சொத்தை வாதிகள் 35 ஆண்டுகளுக்கு மேலாக காம்பவுண்ட் சுவர் கட்டி அனுபவித்து வந்ததாக வாதிடப்படுகிறன்றது. இருப்பினும் 35 ஆண்டுகளுக்கு முன்பு காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது என்பது சம்மந்தமாக வாதிகள் தரப்பில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

10.4) இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.8 ஆவணமாக 4ம் பிரதிவாதியான A.O.K. கருப்பணன் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட கேவியட் மனுவின் அலுவலக நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.8 ஆவணத்தில் சொத்து விவரத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் 55–ம் நம்பர் கல்லம்பட்டி கிராமத்தில் 1வது வார்டில் ஊர்குடியிருப்பில் உள்ள*

*1) 1வது மனுதாருக்கு பாத்தியப்பட்ட கிழமேல் 9.20 மீட்டரும் தென்வடல் 2.85 மீட்டரும் உள்ள மனையிடமும் அதில் கிழமேல் 5 மீட்டருக்கும் தென்வடல் 2.85 மீட்டருக்கும் கட்டப்பட்டுள்ள டோர் நம்பர் 1/109 உள்ள வீடும் மேற்படி வீட்டிற்கு மேல் புறத்தில் கிழமேல் 2.2 மீட்டரும் தென்வடல் 2.85 மீட்டரும் உள்ள காலியிடமும், மேற்படி வீட்டிற்கு கீழ்புறத்தில் சர்வே 318/28ல் கட்டுப்பட்டுள்ள கிழமேல் 1.90 மீட்டரும்*

*தென்வடல் 2.85 மீட்டரும் உள்ள காலியிடமும் உள்பட.*

*2) மேற்படி 1வது இலக்க சொத்திற்கு தென்புறத்தில் உள்ள 2வது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கிழமேல் 9.20 மீட்டரும் தென்வடல் 2.85 மீட்டரும் தென்வடல் 2.85 மீட்டருக்கும், தென்வடல் 2.85 மீட்டரிலும் கட்டப்பட்டுள்ள டோர் நம்பர் 1/109 உள்ள வீடும் மேற்படி வீட்டிற்கு மேல் புறத்தில் கிழமேல் 2.20 மீட்டரும் தென்வடல் 2.85 மீட்டரும் உள்ள காலியிடமும், மேற்படி வீட்டிற்கு கீழ்புறத்தில் சர்வே 318/28-ல் கட்டுப்பட்டுள்ள கிழமேல் 1.90 மீட்டரும் தென்வடல் 2.85 மீட்டரும் உள்ள காலியிடமும் உள்பட.*

*3) மேற்படி 2வது இலக்க சொத்திற்கு தென்புறமுள்ள 3வது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கிழமேல் 9.20 மீட்டரும் தென்வடல் 2.85 மீட்டரும் உள்ள மனையிடம், மேற்படி இடத்தில் ஏற்கனவே ஒரு வீடு இடிந்து போய்விட்டது. மேற்படி இடத்திற்குள் கீழ்புறத்தில் கிழமேல் 1.90 மீட்டரும் தென்வடல் 2.85 மீட்டரும் உள்ள காலியிடமும் சர்வே 318/28 ல் கட்டுப்பட்டது.*

*4) மேற்படி 3வது இலக்க சொத்திற்கு தென்புறமுள்ள 4வது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கிழமேல் 9.20 மீட்டரும் தென்வடல் 8.55 மீட்டரும் உள்ள மனையிடமும் அதற்குள் கிழமேல் 5 மீட்டரிலும் தென்வடல் 2.85 மீட்டரிலும் கட்டப்பட்டுள்ள வீடும் மேற்படி வீட்டிற்குக் கீழ் புறத்தில் சர்வே : 318/28-ல் கட்டுப்பட்ட கிழ மேல் 1.90 மீட்டரும் தென்வடல் 2.85 மீட்டரும் உள்ள மனையிடமும் மேற்படி வீட்டிற்கு மேல் புறம் கிழமேல் 2.20 மீட்டரும் தென்வடல் 6 மீட்டரும் உள்ள காலி மனையிடமும் உள்பட.*

10.5) அதாவது வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள COP No.311/2007 வாதி மற்றும் 3 நபர்களால் இந்த வழக்கின் 4ம் பிரதிவாதியான A.O.K. கருப்பணன்

என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள கேவியட் மனு சொத்து விவரங்களில் சர்வே எண்.318/28–ல் கட்டுப்பட்ட காலி மனையிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர காம்பவுண்ட் சுவர் இருந்ததாக எந்த குறிப்பும் காணப்படவில்லை. அதாவது 2007ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட COP No.311/2007 கேவியட் மனுவின் சொத்து விபரங்களில் சர்வே எண்.318/28–ல் கட்டுப்பட்ட காலி மனையிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் 35 ஆண்டுகளுக்கு மேலாக சர்வே எண்.318/28–ல் காம்பவுண்ட் சுவர் இருந்து வருகிறது என்ற வாதி தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

10.6) தாவா சொத்தான சர்வே எண்.318/28–ஆனது சர்க்கார் புறம்போக்கு சந்து என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளநிலையில், சர்க்கார் புறம்போக்கு சந்து சம்மந்தமாக வாதி தரப்பில் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோருவது நிலைக்கக்கூடியதா? என்று பரிசீலனை செய்து பார்க்கும்போது, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை) ஆனது *S.A.(MD).Nos.987 & 988 of 2009 dated 05.02.2020 – G.Ramaswamy Vs. R. Dasan and G.Ramaswamy Vs. The State of Tamilnadu Rep. by its District Collector and others* என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளது.

> *15. As per dictionary, the word "Nilaviyal Pathai" means "Geological Pathway" and the Revenue records clearly indicate that the property is a"Nilaviyal Pathai". The judgment of this Court, passed in* ***S.A.No.1641 of 2011, dated 16.11.2014,*** *in the case of* ***N.M.Ganeshan Vs. The Commissioner, Sathyamangalam Municipality,*** *it is clearly held in paragraph No.6 as follows :*
>
> > *"It is not disputed by the appellant tha the land in question is classified in the Revenue records as 'Nilaviyal Chandu' and it meant for General Public for their use as a Public Street. The Respondent-Muncipality is one*

> *of the wings of the Government and is empowered to protect the Public lands from being encroached."*

*16. Similarly Division Bench of this Court has reported a judgment in* ***2018(1) CWC 529*** *in the case of* ***J.Jagadesh Vs. Tahsildar, Modakurichi Taluk, Erode District and one another*** *and has held that 'Nilaviyal Vandi Pathai' – Cart-track formed in Patta land has been described as a 'Nilaviyal Vandi Pathai' in the Revenue records. When the fact is established that the suit pathway is described as a 'Nilaviyal Pathai' and its dictionary meaning a "Geological Path". It is only meant to use by all the Public and not by the appellant only. Accordingly, merely there is no definition in the Board Standing Orders with regard to 'Nilaviyal Pathai' one cannot contend that such pathway cannot be used by Public. The purpose of classifying such pathway in Revenue records for Public usage.*

10.7) மேலே கண்ட தீர்ப்புரையின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா சொத்தான சர்வே எண்.318/28–ஆனது சர்க்கார் புறம்போக்கு சந்து என்று வாதி தரப்பிலேயே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளநிலையில், சர்க்கார் புறம்போக்கு சந்து சம்மந்தமாக வாதி தரப்பில் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோருவது நிலைக்கக்கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10.8) மேலும், இந்த வழக்கில் வாதி தரப்பில் தேர்தல் முன்பகை காரணமாக வா.சா.ஆ.5, வா.சா.ஆ6 அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது என்றும், மேற்படி அறிவிப்புகள் சர்வே எண்.318/28 என்பதற்கு பதிலாக சர்வே எண்.318/3 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அவசர அவசரமாக பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் அறிவிப்பு அனுப்பப்பட்டதால்தான் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

10.9) இதுசம்மந்தமாக வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 ஆவணங்களை

பார்வையிடும்போது, சர்வே எண்..318/3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

10.10) இருப்பினும், மேற்படி அறிவிப்புகளுக்கு சட்டப்படி வாதி தரப்பில் பதில் அளிக்கப்பட்டதாக எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.1 தனது குறுக்குவிசாரணையில் *"2ம் பிரதிவாதி எனக்கு நோட்டீசு கொடுத்த பின்னர் நான் ஆட்சேபணை செய்து மனுக் கொடுத்தேனா என்றால் நான் நீதிமன்றத்திற்கு வந்து வழக்கு தாக்கல் செய்து விட்டேன்.."* என்று சாட்சியம் அளித்துள்ளார். அதாவது, அறிவிப்பில் சர்வே எண் தவறாக உள்ளது என்று எந்தவொரு ஆட்சேபணையும், அறிவிப்பு அனுப்பிய அதிகாரிகளிடம் தெரிவிக்காமல் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10.11) மேலே கண்டவற்றின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா சொத்தான சர்வே எண்.318/28ஆனது சந்து என வாதி தரப்பிலேயே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், 2007ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட COP No.311/2007 கேவியட் மனுவின் சொத்து விரங்களில் சர்வே எண்.318/28–ல் கட்டுப்பட்ட காலி மனையிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் 35 ஆண்டுகளுக்கு மேலாக சர்வே எண்.318/28–ல் காம்பவுண்ட் சுவர் இருந்து வருகிறது என்ற வாதி தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்பதை கருத்தில் கொண்டும், அறிவிப்பில் சர்வே எண் தவறாக உள்ளது என்று எந்தவொரு ஆட்சேபணையும், அறிவிப்பு அனுப்பிய அதிகாரிகளிடம் தெரிவிக்கவில்லை என்பதை கருத்தில் கொண்டும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா சொத்து சம்மந்தமாக வாதி கோரும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்குக் கிடைக்கக்கூடியதல்ல என்று

இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எழுவினாக்கள் 1, 2–யைப் பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

<u>11. எழுவினா 3ற்கான தீர்வு</u> :

3) Whether the 7th defendant is entitled to the relief of Mandatory Injunction as prayed in the counter claim?

11.1) 7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்கோருரிமையில் தாவா சொத்தான சர்க்கார் புறம்போக்கு சந்து வாதி கட்டியுள்ள காம்பவுண்ட் சுவரை குறிப்பிட்ட காலத்திற்குள் அகற்ற செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

11.2) இருப்பினும், இந்த வழக்கில் 7ம் பிரதிவாதி இறந்துவிட்டநிலையிலும், 7ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களான 8 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் எந்தவொரு சாட்சியமும் விசாரிக்கப்படவில்லை. 8 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, எதிர்கோருரிமை சம்மந்தமாக வலியுறுத்தவில்லை என்று தெரிவித்துள்ளார்.

11.3) எனவே, 7ம் பிரதிவாதி தரப்பு எதிர்கோருரிமை சம்மந்தமாக எந்தவொரு சாட்சியமும் விசாரிக்கப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், 8 முதல் 11ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது எதிர்கோருரிமை சம்மந்தமாக வலியுறுத்தவில்லை என்று தெரிவித்துள்ளதை கருத்தில் கொண்டும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, 7ம் பிரதிவாதி தரப்பு எதிர்கோருரிமை 8 முதல் 11 பிரதிவாதிகளுக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. 7ம் பிரதிவாதி தரப்பு எதிர்கோருரிமையான எழுவினா 3–யை பொறுத்து 7ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

<u>12. எழுவினா –4ற்கான தீர்வு</u> :

4) To what other reliefs the parties to the suit are entitled?

எழுவினாக்கள் 1 மற்றும் 2யை பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு

காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், எழுவினா–3ஐ பொறுத்து 7ம் பிரதிவாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக் கூடியதல்ல என்று எழுவினா 4–யை பொறுத்து இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,**

1. **வாதியின் வழக்கானது தள்ளுபடி செய்யப்படுகிறது.**
2. **7ம் பிரதிவாதியின் எதிர்கோருரிமை தள்ளுபடி செய்யப்படுகிறது.**
3. **செலவுத் தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHARAJAN PONNAMBALAM
Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.08.28 12:50:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

வாதி தரப்பு சாட்சிகள் :

1.வா.சா.1 – திரு. மலையாண்டி (எ) ராசு
2.வா.சா.2 – திரு. மந்தை வீரன்

வாதி தரப்பு சான்றாவணங்கள் :

| வாதி தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | ---- | கோட்டை வீரன் என்பவர் பெயரிலான நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.2 | ---- | மலையாண்டி என்பவர் பெயரிலான நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.3 | ---- | புல எண்கள். 317, 318, 319க்கான புல வரைபடங்கள். | உண்மை நகல். |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.4 | ---- | நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடு. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.5 | 24.01.2012 | வட்டார வளர்ச்சி அலுவலரின் கடிதம். | புகைப்பட நகல். |
| வா.சா.ஆ.6 | 27.01.2012 | வட்டார வளர்ச்சி அலுவலரின் கடிதம். | புகைப்பட நகல். |
| வா.சா.ஆ.7 | 19.02.2005 | வீட்டுவரி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.8 | ---- | கேவியட் மனு. | நகல். |
| வா.சா.ஆ.9 | ---- | வா.சா.2ன் ஆதார் அடையாள அட்டை. | அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட நகல். |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>

1. பி.வா.சா.1 – திரு. சுந்தரசாமி (வட்டார வளர்ச்சி அலுவலர்)
2. பி.வா.சா.2 – திரு.A.O.K. கருப்பணன்

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| <u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம்</u> | <u>தேதி</u> | <u>ஆவண விபரம்</u> | <u>குறிப்பு</u> |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | ---- | சர்வே எண்.318/24–ற்குரிய நத்தம் தூய அடங்கல் பதிவேடு. | உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.2 | ---- | சர்வே எண்.318/28–ற்குரிய நத்தம் தூய அடங்கல் பதிவேடு. | உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.3 | ---- | சர்வே எண்.318ற்குரிய புல வரைபடம். | உண்மை நகல். |

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.08.28 12:50:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.